தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௰ | தாரண—மாசி 1945—பிப்ரவரி | மலர் ௰௧

நாவலர் பாரதியார் நன்றே வாழியர் !

சொன்மறவர் சோமசுந்தர பாரதியார் அவர்களைத் தமிழுலகம் நன்கறியும். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப்பகுதித் தலைவராயிலங்கி இவர்கள் ஆற்றிய தமிழ்ப் பணியைத் தமிழர்கள் என்றும் போற்றுங் கடப்பாடுடையர். தாய்மொழிக்கு ஊறு நேர்ந்த காலத்தில் தமிழ்க்கொடி ஏந்தித் தமிழ் நாடெங்கும் சென்று வீர முழக்கெழுப்பித் தமிழர்களைத் தட்டியெழுப்பி யுணர்ச்சி யூட்டிக் கிளர்ச்சி எழுப்பிப் போராடி வென்றி கண்ட பெருமகனுவார். தாம் உண்மையெனக் கண்டதைப் பின்பற்றி எத்தகைய இடையூறுகளையும் பொருட் படுத்தாது தாளாண்மையுடன் பணியாற்றுதலில் தலைமை சான்ற மறவர் பாரதியார் அவர்களேயாவர். எங் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்புகொண்டு ஆண்டுவிழாவிற் றலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றியும்,சங்கவளன் வேண்டிப் பல்வகையாய பணிகளை மேற்கொண்டும், கட்டுரைகள் வரைந்து தமிழ்ப் பொழிலுக்களித்தும் நன்ருற்றி வருகின்ற நன்மகனுவார். காலஞ்சென்ற இலக்கணப் பெரும்புலவர் சோழவந்தான் அரசஞ்சண்முகனுர் அவர்கட்குப்பின் தொல்காப்பிய நூற்பாக்களை நன்கு துருவி யாராய்ந்து எல்லோரும் ஒப்பப் பிறவுரைகளை மறுத்துத் தாம் கண்ட நல்லுரைகளைத் திட்ப நுட்பம் சாலச் சிருற வரைந்தளித்தவர் பேராசிரியர். சோமசுந்தர பாரதியாரவர்களேயாவர்.

தமிழ்ப்பெரும் புலவர்களைத் தமிழகம் மதித்துப் போற்ருமையி னலேயே தமிழகத்தின் நிலை தாழ்ந்துளது. சிறந்த சொல்வன்மையும், செய்யுளியற்றும் ஆற்றலும் இலக்கிய இலக்கண நூற்களில் சிறந்த புலமை வீறும், வழக்கறிஞராம் மாண்பும் பெற்று '**மாரிவாயில்**' போன்ற செய்யுள் நூலும், தொல்காப்பியப் பொருளதிகார அகம் புறம் மெய்ப்பாடு உவமம் ஆகிய இயல்களுக்கு நல்ல தெளிபொருள் உரையும் வரைந்தளித்த இப் பெரியார்க்கு இவரின் அறுபதாம் ஆண்டின் நிறைவு நாளின் நினைவுக்குறியாக வேனும் தமிழகத்தார்

ஒரு பாராட்டுவிழா அயர்ந்தனரா? இவர்களை யூக்கித் தொல்காப்பிய ஏனைய இயல்கட்கும் ஏனைய அதிகாரங்கட்கும் உரை எழுதத் தூண்டினரா? குடத்துள் வைத்த விளக்கேபோல் தமிழகத்தின் ஒரு மூலையில் ஒதுங்கி நின்ற பாரதியாரின் பெருமையினைத் தமிழகம் மறந்ததாயினும், தமிழ்ப்பெருமகனர் ஆறுமுக நாவலரவர்கள் தோன்றிய நற்பெரும் பதியாகிய யாழ்ப்பாணத்து நல்லூர் பாரதியாரின் பெருமைகளை நன்குணர்ந்து ஈழத்திற் கழைத்துச் சொற்பொழி வாற்றச்செய்து செவிவாயாகச் சொற்பொருள் மடுத்து மகிழ்ந்து '**நாவலர்**' என்ற நற்பெரும் பட்டமும், நல்லுரை பொதிந்த செப்புப் பட்டயமும், ஆவணமும் அளித்து நம்பாரதியாரைச் சிறப்பித்துளது. யாழ்ப்பாண நல்லூரில் நகராட்சி மன்றப்பொது மண்டபத்தில் கீழைநாட்டுத் தமிழ்ப் புலவர் மன்றத்தின் முதலாண்டு நிறைவிழா வின்போது இப்பட்டமும் பட்டயமும் வழங்கப் பெற்றதாகலின் பாரதியார் அவர்கள் முதற்பரிசினை யாழ்ப்பாணத்து நல்லூர்த் தமிழறிஞர்களிடமிருந்து பெற்றுள்ளார். பாரதியார் அவர்களைப் பாராட்டிப் பட்டம் வழங்கிச் சிறப்பித்து, மகிழும்பேறு தமிழகத்திற் கில்லையா? சென்னை அண்ணுமலைப் பல்கலைக் கழகங்களோடு தொடர்பு கொண்டு நம் பாரதியாரவர்கள் பணியாற்றியுள்ளார் களாதலின் இவ்விரு கழகங்களும் Doctor (பேரறிஞர்) முதலிய சிறந்த பட்டங்களை நம் பாரதியார்க்கு வழங்கிப் பாரதியாரைச் சிறப்பிக்கு முகத்தால் தம்மைச் சிறப்பித்துக் கொள்ள வேண்டுமென வேண்டுகின்ருேம். எம் சங்க உறுப்பினராய், சங்க வளர்ச்சியிலும், சங்கக் கல்லூரி வளர்ச்சியிலும், தமிழ்ப் பொழில் வளர்ச்சியிலும் தளராத அன்பு காட்டி ஆக்கமளித்து வரும் **நாவலர் S. S. பாரதியார்** எல்லா நலனும் பெற்று நாளும் வாழியரெனத் தமிழன்னையை வணங்கி வாழ்த்துகின்ருேம். **நாவலர் பாரதியார் நலமுற வாழியர்!**

தமிழ் வாழ்க.

மணிவாசக மன்றம்

பெரியகுளம்.

அன்பரீர்!

"**கலைவளர்ச்சி**" கருதி ஒவ்வொரு **ஞாயிற்றுக்கிழமையும் மாலை 6 மணிக்கு** மணிவாசக மன்றக் கட்டிடத்தில் சொற்பொழிவு வாத முறையில் நடைபெற்று வருகிறது. இனியும் தவருது நடைபெறும். "**மொழி, கலை, சமுதாயம்**" இவை பற்றிய கருத்துக்களே வாதிக்கப் படும். யாவரும் கலந்து "**கலைவளர்ச்சி**" க்கு உதவக் கோருகிருேம். ஒவ்வொருவரது கருத்தையும் செயலாளர் இசைவு பெற்றுக் கூட்டத்தில் பேச உரிமையுண்டு. முயற்சியை, நிகழ்ச்சியில் வெற்றியுறச் செய்ய யாவரையும் வேண்டிக் கொள்ளுகிருேம்.

தங்கள்
மீ. சு. இளமுருகனர்,
பொதுச்செயலாளர்.

ஆற்காட்டு முதலியார் இருவரும் அணிகொடு வாழியர்!

ஆற்காட்டு முதலியார் குடும்பம் தமிழ்நாட்டில் தலைமைசான்ற ஆங்கில அறிவுபெற்றுத் தமிழர்களுள் அரசியலில் மிக மிக முன்னேற்ற மடைந்து உயர்ந்த பதவிகளில் அமர்ந்து தமிழர் பெருமை கொளச் சால்புற விளங்கிவருதலை அன்பர்கள் அறிவார்கள்.

சர். A. இராமசாமி முதலியார் அவர்களும் சர். A. இலக்குமணசாமி முதலியார் அவர்களும் இரட்டைக்குழந்தைகள். ஒருவர் எல்லா இந்திய ஆட்சிப் பொறுப்பாள் உறுப்பினருள் ஒருவராகத் திகழ்கின்றார். ஒருவர் சென்னைப்பல்கலைக் கழகத்துணை வேந்தராகத் (Vice Chancellor of Madras University) திகழ்கின்றார். பல்லாண்டுகட்கு முன்னரேயே அரசாங்கத்தார் இராமசாமி முதலியார் அவர்கட்கு 'சர்' பட்டம் வழங்கினார்கள். இலக்குமணசாமி முதலியார் அவர்கட்கு இப்போது 'சர்' பட்டம் வழங்கியுள்ளனர். இலக்குமணசாமி முதலியார் அவர்கட்கு, பேரறிஞர் (Doctor) பட்டம் படிப்பின்மூலம் கிடைத்ததாகும். சர். A. இராமசாமி முதலியார் அவர்கட்கும் உஸ்மானிய பல்கலைக் கழகம் இதுபோது பேரறிஞர் (Doctor) பட்டம் வழங்கியுளது. இம்முறையில் இருவரும் பேரறிஞராயினர். இருவரும் சர். பட்டம் பெற்றோராயினர். அறிவு ஆற்றல் ஆட்சித்திறன் முதலிய சிறந்த நற்பண்புகள் அமையப்பெற்ற இப்பெருமகனார் இருவரும் மேலும் சிறந்து பல்புகழ் பெற்றுப் பல்லூழி வாழியரென வாழ்த்துகின்றோம்.

தஞ்சைத் தமிழிசைக் கல்லூரித் திறப்புவிழா.

தஞ்சைத் தமிழிசைக் கல்லூரித் திறப்புவிழா தாரண ஆண்டு தைத்திங்கள் 14 (27—1—45)ஆம் நாள் மாலை 6½ மணிக்கு, கரந்தைத் தமிழ்ச்சங்கத் தமிழ்ப்பெரு மன்றத்தில் தஞ்சை நகரமன்றத் தலைவர் இராவுபகதூர் A. Y. அருளானந்தசாமி நாடார் அவர்கள் தலைமையில் தொடங்கப்பெற்றது. இசைப்பேராசிரியர் க. பொன்னையா பிள்ளை அவர்கள், தமிழர்கள் இசை கற்கவேண்டியதன் இன்றியமையாமையை இனிதுற விளக்கிக் கல்லூரியைத் திறந்துவைத்து மாணவர்கட்கு இசையையும் பயிற்றுவித்தார்கள். 34-மாணவர் பெயர்கொடுத்துக் கல்லூரியிற் சேர்ந்துள்ளனர். இராவுசாகிபு ஐ. குமாரசாமிபிள்ளை அவர்கள் இக்கல்லூரியிற் சேர்ந்து இசைப்பயிற்சி பெறும் மாணவர்களுள் தகுதியுடையாரை அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரியிற் சேர்த்துக் கொள்ள நற்சான்று வழங்கப்பெறுமென்றும், இக்கல்லூரிப் பேராசிரியராக இசைப்பேராசிரியர் க. பொன்னையா பிள்ளை அவர்கள் இருப்பார்களென்றும், இசைபயிற்றும் ஆசிரியராக பொன்னையாபிள்ளை அவர்களின் மாணவர் நாராயணசாமி பிள்ளை அவர்கள் நாளும் மாலையில் இசை பயிற்றுவிப்பாரென்றும், இலவசமாக எல்லோரும் வந்து இசைகற்கலாம் என்றும்கூறி, எல்லோர்க்கும் நன்றியறிவித்தார்கள். தமிழ்த்தாய் வாழ்த்துடன் இக் கூட்டம் இனிதுமுடிந்தது.

மதிப்புரை

தொழிலாளர்மித்திரன்: திங்கள் இருமுறை வெளியிடப் பெறும் இதழ். கிடைக்குமிடம், மானேசர், சேந்தரேஸ் தெரு, புதுச்சேரி. காஞ்சி, கலியாண சுந்தரனுரை ஆசிரியராகக் கொண்டு புதுவையினின்றும் மாதம் இருமுறை வெளிவரும் 'தொழிலாளர் மித்திரன்' எனுமிதழ் வரப்பெற்ருேம். தொழிலாளர் முன்னேற்றத்திற்குரிய பல அரிய கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டு மித்திரன் வெளிவருகின்றுன். உலகப்போக்குத் தொழிலாளர்கட்கு ஆக்கம் விளைவிக்கும் நிலையில் உளதாகலின், இதுபோது தொழிலாளர்க்கென ஓரிதழ் தோன்றிப் பணியாற்றல் எவ்வாற்றுனும் அவர்கட்குப் பெருநலன் விளைக்குமென்பதில் ஐயமில்லையாம். இவ்விதழாசிரியர் காஞ்சி. கலியாணசுந்தரனுரைத் தமிழுலகம் நன்கறியுமாதலின் யாம் இவரைக் குறித்துத் தமிழர்க்கு அறிவித்தல் மிகையெனக் கருதுகின்ருேம். "! **கண்ணேட்டமின்றித் தொழிலாளர் நலன்கருதித் தொழிலாளர் குறைகளை எடுத்துக்காட்டி முதலாளிகளிடமிருந்து தொழிலாளிகட்குக் கிடைக்க வேண்டிய உரிமைக்கு மித்திரன் போராடும்**" என இவ்வாசிரியர் கூறியுள்ளாராதலின் தொழிலாளர்களும் தொழிலாளர்களின் நலம் விரும்புவோரும் இவ்விதழை ஆதரித்து வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டுகின்ருேம். இவ்விதழாசிரியர் சிறந்த சொற்பொழிவாற்றுந் திறன்படைத்தவர்; கட்டுரை எழுதும் வன்மை படைத்தவர்; எல்லோரிடமும் இனிமையாகப் பேசிப் பழகும் பண்புபெற்றவர். இத்தக்காரின் தலைமையில் மித்திரன் தழைத்தோங்க வேண்டுமெனத் தமிழன்னையை வாழ்த்தி வேண்டுகின்ருேம்.

பாராட்டு.

19—1—45 மாலை 7 மணிக்குக் காஞ்சிமாநகரின் பங்கீடு அலுவர் திரு. கீ. இராமலிங்க முதலியார் எம், ஏ., அவர்கள் தலைமையில் கூடிய காஞ்சி மாந்தர் பேரவையில் உயர்திருவாளர் க. வச்சிரவேல் முதலியார் அவர்கட்கு ஒரு தேநீர் விருந்து நடந்தது. ஒரு பாராட்டுப் பரிவுரையும் படித்துக் கொடுக்கப் பெற்றது. பல அறிஞர்கள் பாராட்டிப் பேசினர். அந்த அவையில் திருவாவடுதுறை, தருமபுரம் மடங்களின் ஆதரவில் மெய்கண்டான் சைவ சித்தாந்தக் கல்லூரி அமைப்பையும், அதற்குத் திரு. வச்சிரவேல் முதலியாரவர்களை முதல்வராக (பிரின்சிபால்) அமர்த்தியமையையும் பாராட்டி ஒரு முடிபு நிறைவெய்தியது.

சிறுசோறு

வித்துவான். வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்
ஆராய்ச்சித்துறைப் பண்டிதர் சென்னைப்பல்கலைக்கழகம்.

(முற்றொடர்ச்சி துணர் 19 மலர் 12 பக்கம் 250)

தழை

தழை என்னுஞ் சொல் இலைதளிர்கட்கும் இவற்றையுடைய சிறு கொம்பிற்கும் பெயராய் வழங்குகின்றது. செய்யுட்களில் மகளிரின் உடைக்கும் வழங்கியுளது. ஆயின், இவ்வுடை எல்லாப் பருவத்து மகளிரும் உடுப்பதுவா, யாதேனும் ஒரு பருவத்தில் உள்ள மகளிர் உடுப்பதுவா என்பது உறுதியாகத் தெரிந்திலது. ஆகலின், இதுபற்றி ஆராய்ந்தவிடத்து,

'அளியதாமே சிறுவெள் ளாம்பல்
இளையமாகத் தழையா யினவே' (புறம். 248)

என்னும் புறப்பாட்டடிகளால், இது (தழை) இளமகளிர் உடுப்பது எனத் தெரிந்தது. பின்னர், இளமகளிருள் எப்பருவத்தினர் உடுப்பது என்று நோக்கிய விடத்து, அகநானூற்றின் ஏழாம் பாட்டினால், இது பெதும்பைப் பருவத்து மகளிர் உடுக்கும் உடை என அறியலாயிற்று. அச் செய்யுளை ஈண்டுக் குறிக்கின்றேன்.

'முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
தலைமுடி சான்ற தண்டழை யுடையை;
அலமர லாயமொ டியாங்கணும் [1]படாஅல்;
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய
காப்பும் பூண்டிசின்; கடையும் போகலை;
பேதை யல்லை; மேதையங் குறுமகள்
பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தென
ஒண்சுடர் நல்லி லருங்கடி நீவித்
தன்சிதை வறிக லஞ்சி ...
... ...
இச்சுரம் படர்தந் தோளே ...
... ... பொன்னொடு
புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி

---

[1] 'படரல்' என்பது பாடமாகும் எனத் தோன்றுகின்றது. ஏடுகளில், படரல் என்று வாசிக்கவேண்டுமதனைப் படால் என்றும் வாசிக்கக் கூடுமாகலின் அவ்வாறு வாசித்து, இசை நிறைக்க அளபெடை யிட்டிருப்பர் எனத் தெரிகின்றது. 'இச்சுரம் படர்தந் தோளே' என்று முன்னர் வருதலின், ஈண்டுப் 'படரல்' என்பதுவே பாடமாகும் என்பது வலியுறும். 'படரே உள்ளல் செலவு மாகும்' என்பது காண்க.

ஒலிக்குழைச் செயலை உடைமா ணல்குல்
... ...
கற்கெழு சிறுகுடிக் கானவன் மகளே.'

இச்செய்யுள் மகளைத் தேடிச்சென்ற செவிலியின் கூற்று. இதன் முதலிரண்டடிகளில் பெதும்பைப் பருவத்தின் இயல்பு வருணிக்கப் பட்டுளது. 'முலை முகஞ்செய்தன, எயிறு இலங்கின, முடி சான்ற' என்பன அப்பருவத்தைக் காட்டுவன. 'இலங்குதல்-விழுந்து எழுந்து ஒளிவிடுதல்' என்று பழைய வுரைகாரர் எழுதியிருப்பது உளங் கொளற்பாலது. 'முலை முகஞ்செய்தன' என்பது முதலாக மூன்று வாக்கியங்களும் பெதும்பைப் பருவத்தைக் குறிப்பிடுவனவாயிருத் தலின், அவற்றோடு ஒருங்குகூறப்பட்ட 'தண் டழை யுடையை' என்னும் வாக்கியமும் அப்பருவத்தைக் குறிப்பிடுவதே யாகுமன்றே! ஆகலின், தழையுடை பேதைப்பருவத்திலன்றிப் பெதும்பைப் பருவம் அடைந்தபின் உடுக்கும் உடையே என்பது நன்கறியப்படும். இல்லை யேல், இவ்வாக்கியம் ஈண்டைக்கு அமைவுடையதன்ருகு மன்றே?

[2]மலையாள நாட்டில் நம்பூதிரிமார் இல்லத்தில் பெண்கள் எட்டு ஒன்பது வயசுவரை கமுகம்பாளையைக் கௌபீனமாகத் தரித்தலும், அதன்மேல் முதுக்குறையுந்தளையும் அரையைச் சுற்றிமட்டும் (லங் கோடு போல) ஒருவகையாக உடை தரித்தலும் இன்றும் வழக்காரு யிருப்பது இங்கு அறிதற்பாலது. இவற்ருல் பேதைப்பருவத்து உடை யினும் பெதும்பைப் பருவத்தில் உடை வேறுபடுதல் உண்டு என்பது போதரும்.

இனி, அறிவறியும் பருவத்துப் பெண்கள் அந்திக் காலங்களில் வெளியே சென்ருல் அவரைப் பேய்பிடிக்கும் என்றும், அதனுல் அந் நேரத்தில் வெளிச்செல்லுதல் கூடாது என்றும் இக்காலத்தும் முதிய வர் கூறுகின்றனர். இக்கருத்து,

'மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய'

என்னும் அடியினுல் பெறப்படும். அணங்கு பிடிக்கும் என்பது கருதியே,

'காப்பும் பூண்டிசின் கடையும் போகலை'

என்று கூறினுள். காப்பு-ரக்ஷைக்காக அணியும் அணிவகை. பூண்டி சின் என்பது பூணுதி என்னும் பொருளது. இதில், 'சின்' அசைச் சொல் என்பர் இலக்கண நூலார். காண்டி என்பது காணுதி என்னும் பொருளில் பயின்று வழங்குதல் ஈண்டைக்கு நினைக்கற்பாலது. காப் பும் பூண்டிசின் என்பதற்குக் குறிப்புரைகாரர், 'காவலும் பூண்டாய்' என்று பொருள் எழுதி யிருப்பது அமைவுடையதாதல் இல்லை. 'காவ லும் பூண்டாய்' என்பது, காத்தற் ருெழிலும் மேற்கொண்டாய்

---

[2] தமிழ் நாட்டிற் சில பகுதிகளில் பார்ப்பனமரபில் மணமாகாத இளம் பெண்களுடையைத் தழை என்றும் தழைகட்டுதல் என்றுஞ் சொல்லும் வழக்கு உளது எனத் தெரிகின்றது.

என்னும் பொருளதாகும். இவள் காவலே மேற்கொண்டுள்ளா ளல்லள். அன்றியும்,

'மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய
காப்பும் பூண்டிசின்'

என்று ஒருங்கு இயைத்துக் கூறியதன் கருத்தும் பயனின்ருகும். இவ்வாற்ருல், 'காப்பு' என்பதற்கு ரக்ஷையாக அணியும் அணிவகை (வளே) என்று பொருள் கோடலே அமைவுடையது என்பது துணி பாகும்.

மேலே கூறியவற்ருல், தழையுடை பெதும்பைப் பருவத்தில் உடுக்கப்படுவது என்பது விள்க்கமுறும்.

ஆயின், தழை, மங்கைப்பருவம் முதலிய பருவத்து மகளிருடை யாகப் பண்டைச் செய்யுட்களிலும் கோவைகளிலும் கூறப்பட்டுள தால் எனின், அவ்வழக்கு மொழிகளில் நேருவதொன்றே யாகும். ஐம்பால் என்பது சிறிய இளம்பெண்களின் தலேமுடிக்குப் பண்டு வழங்கியது. அவர்கள் தலேமுடி ஒன்ருகப் பின்னுதற்கு இயலாமை யின் ஐந்து பகுதியாகப் பிரிக்கப்பட்டு வேறுவேருக ஒப்பனே செய்யப் படுமாகலின் அஃது ஐம்பால் எனப்பட்டது. பெதும்பைப் பருவத்தை வருணித்த மேலே அகப்பாட்டில், 'தலேமுடிசான்ற' என்று கூறப் பட்டிருத்தலின், அதற்கு முன்னேய பருவத்தேதான் ஐந்து பகுதியாக முடிக்கப்படும் எனத்தெரிகிறது. இது,

'நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன
ஐவகை பாராட்டி ஞய்மற்றெங் கூந்தற்
செய்வினே பாராட் டினேயோ ஐய'

என்னுங் கலித்தொகைச் செய்யுளானும் அறியப்படும். ஐவகை இள மைப் பருவத்தில் நிகழ்வது என்பது, இத் தாழிசையின் முன்னும் பின்னும் உள்ள தாழிசைச் செய்தியானும் விளக்கமுறும்.

'நறுமுல்லே யேர்முகை யொப்ப நிரைத்த
[3]செறிமுறை பாராட்டி ஞய்மற்றெம் பல்லின்
பறிமுறை பாராட் டினேயோ ஐய'

என்னும் முதற்ருழிசையில், பற்கள் வீழாததன்முன்னர் அவற்றைப் பாராட்டினவன், அவை விழுந்து முளேத்தபின் அவற்றைப் பாராட் டியதிலன் என்று கூறியிருத்தலே நோக்கின், சிற்றிளம் பருவத்தினே ப்பாராட்டினுன் என்பது தெளிவாகும். ஆகவே, ஐம்பால் சிற்றிளம் பருவத்திற் செய்யும் ஒப்பனேயே என்பது துணியப்படும். அவ்வா ருகவும், இளமகளிர் திறத்திலும் முதியமகளிர் திறத்திலும் ஐம்பால் என்னும் சொல்வழங்கப்பட்டுளது. இவைபோன்ற சொல்வழக்குப் பல காணலாகும். (தொடரும்)

[3] செறிமுறை, பறிமுறை என்பவற்றை முன் பின்னுக மாற்றவேண்டும் என்ருர் நச்சினுர்க்கினியர். பற்கள் வீழ்ந்து முளேப்பதன் முன்னரே எல்லா ருக்கும் வரிசையாயிருக்கும். ஆகலின் மாற்ருதிருப்பது அமைதி எனத் தோன்றுகின்றது.

நூன்மதிப்பு.

எழில்:

இந்நூலாசிரியர் வடவாற்காடு மாவட்டக் காவேரிப் பாக்கம் ஆவணக்களரித் தலைவர் திரு. செ. முத்துவீராசாமி நாயுடு B. A. அவர்கள் ஆவார்கள். எழில்என இந்நூல் பெயர்பெற்றதற்கேற்ப இந் நூற்பாக்களும் எழில்கொடு விளங்குகின்றன. எளிமையும் இனிமை யுங் கலந்த சொன்னயம் பொருள்நயம் அமைந்த 207 பாக்களால் இந் நூல் இயற்றப் பெற்றுளது. ஒவ்வொரு பாட்டிற்கும் இன்றியமையாத குறிப்புரைகளும் விளக்கவுரைகளும் மேற்கோட் குறிப்புக்களும் ஆசிரியரால் ஆங்காங்கு அமைத்தெழுதி விளக்கப்பெறும் செய்தி போற்றத் தக்கதாகும். இந்நூலாசிரியரின் சங்கநூற் பயிற்சியினை யும் ஏனைய நூற்பயிற்சியினையும் புலமைநலன் முதலியவற்றையும் அன்பர்கள் இந்நூலை வாங்கி ஓதியுணர்வதன்மூலம் நன்கறிந்தின்புற வேண்டுகின்றோம். இந்நூலாசிரியர் இவ்வெழில்போன்ற இனிய நூல் களை யியற்றித் தமிழன்னைக்கு அணிந்து எல்லாப்பேறுகளும் பெற்று எழிலுற வாழ வேண்டுமெனத் தமிழன்னையை வணங்கி வாழ்த்து கின்றோம்.

காளமேகப் புலவர் பாடிய திருவானைக்கா உலா: பதிப்பா சிரியர் மு. அருணசலம் M. A. வெளியீடு செந்தமிழ்க் கழகம் சொக்க நாதபுரம் விலை ரூ 2—8—0

சோழ நாட்டில் காவிரிநதியின் கரையில் அமைந்த ஆனைக்கா என்னும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள வெண்ணுவல் ஈசர்மீது காளமேகப் புலவர் பாடிய திருவானைக்கா உலாவினைச் சிறந்த முறை யில் மூலமும் குறிப்புரையுங் கூட்டித் திருவாளர் மு. அருணசலம் M. A. அவர்கள் சொக்கநாதபுரம் செந்தமிழ்க்கழக வெளியீடாகச் சிறந்த முறையில் வெளியிட்டுள்ளார்கள். இத்திருப்பதியைப் பற்றி யும் நூலைப் பற்றியும் இந்நூலாசிரியராகிய காளமேகப் புலவரைப் பற்றியும் நூன்முகத்தில் நன்கு விளக்கி எழுதப்பட்டுள்ளமையின் யாம் அவைபற்றி ஒன்றும் அறிவிக்க வேண்டுவதின்றெனக் கருது கின்றோம். இந்நூல் முன்னொருமுறை 1890-ல் வெளியிடப் பெற்றும் இதுபோழ்து எல்லோருக்கும் எளிமையாகக் கிடைத்தல் அருமை யாக உள்ளமையின் இவ்வாசிரியர் இந்நூலைநன்கு ஆய்ந்து குறிப்புரை எழுதி நூன்முகம் பொருளகராதி முதலிய உறுப்புக்கள் அமைத்து இப்பதிப்பினை வெளியிட்டுள்ளார்கள். இந்நூலின் இனிமையையும் எளிமையையும் சிறப்பினையும் அன்பர்கள் வாங்கிப் படித்து அறிந்து இன்புற வேண்டுகின்றோம்.

இசைப்பாட்டு: விலை அணு 6.

ஆசிரியர், தருமபுர ஆதீன வித்துவான் பாலகவி வயினுகரம் வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் தேவகோட்டை.

தமிழ்நாட்டில் நிகழ்வுறும் இசையரங்குகளில் தமிழ்ப்பாடல் களே பாடப்பெறல்வேண்டும் என்னுமுணர்ச்சி தலைமைபெற்று வருங் காலத்தில் பாலகவி அவர்கள் இவ்விசைப் பாட்டினை யாத்துத் தமி ழர்க்குதவி யுள்ளார்கள். இந்நூலினைத் தமிழிசை வாணர்கள் பயன் படுத்திப் பிறரும் பயன்பெற உதவவேண்டுகின்றோம்.

ஷெல்லியின் 'வானம்பாடி' *

K. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்,

B. A., B. L., தஞ்சை.

உலகில் இன்கவிபாடும் உயரிய ஆற்றலுடைய உண்மைக்கவிகள் ஒருசிலரேயாவர். அன்னவர் புகழே காலத்தை வென்று நிலைக்குந் தன்மையது. நாவினியல் பாலே பாவினியல்பு அமைந்து புகழைக் கவினுற நிலைநாட்டிய ஆங்கில நலவிசைப்புலவர்களு ளொருவர் (P. B. Shelley—*1792—1822*) ஷெல்லி என்பார். இவருடைய பாக்களில் ஒருசில் ஆங்கிலக்கலையின் ஊற்றுக் கண்ணாகி இன்றும் விளங்குகின்றன. இச்சீரியபுலவரது வாக்கினின்று வருவனவெல்லாம் நமது உள்ளத்தைப் பண்படுத்தி ஊடுருவிச் செல்லுந்தன்மை வாய்ந்தன. இவரதுஉள்ளம் என்றும் உயர்ந்தகனவில் ஆழ்ந்துகிடக்கும். விண்புலன்கள் வழி இவரது பரந்துபொலியும் சிந்தனை சிறகடித்துக் கட்டின்றித் தாவிப்பறந்து திரிவதை, இவருடைய பாக்களின்மூலம் நன்கறிந்துணரலாம். **வானம்பாடி, முகிற்படலம், குடதிசைப் பெருங்காற்று** இவைகள் யாவும் ஷெல்லியின் கவிதைமூலம் சொற்சித்திரமாகப் பொலிவுற்றுப் பல்பிறவிபெற்று இன்றும் நிலவுகின்றன. இப்பாக்கள் நெஞ்சுட் பதிவனவாய் நின்று, உள்ள உணர்வைப் பன்முறை பெரிதும் எழுப்பி இன்புறச் செய்யும் பான்மையுடையன.

மறுவில் வாய்மொழிப் புலவராம் ஷெல்லியின் உள்ளத்தில் புத்துணர்ச்சி ஊட்டியது வானத்தோழனாம் வானம்பாடியின் இன்னிசையே. இவ்விசையைக் கேட்டவுடன் இன்பம் அளவற்ற ஆறுதலுடன் இவருள்ளத்திற் பாய்ந்தது. உடனே உள்ளம் ஆர்வக் கனலால் தூண்டப்படவே, வானம்பாடியின் சிறந்த உயிர்ப்புயாவும் ஷெல்லியின் சிந்தனைச் சூழலில்விளையாட ஆரம்பித்துவிட்டன. இவர் தம்மனதில் படிந்த இன்பமே ஓர்அற்புத (Lyric) இசைக்கவிதையாக (Ode to Shelley) மலர்கின்றது. பூத்துக்கொட்டிய இம்மலர்களிலெல்லாம் சொற்சுவையும், பொருட்சுவையும் விரவிய இசைத்தேன் பொங்கித்ததும்பி வழிகின்றது. இதனைச்சுவைக்கும் பெற்றியையுடைய பேரறிவாளர், தம்உளமாகிய மன்றில் இன்பவெளியுள்ளதை உணர்வார். உள்ளத்தில் ஒளிரும் இத்தகைய மெய்யறிவின்பத்தை அனுபவிப்பவர் தாம்உண்மைக்கவிகள். இவ்விசைக்கவிதையில் (Lyric) இனிமை, ஓவியம், ஒளி, மலர்ச்சி, மணம், அழகு முதலியன இயல்பாய் அமைந்துள்ளதை ஒருங்கே காணலாம். தாமேசுரந்த இவரது பாமலர்களெல்லாம் சீர்தளையிட்டு, அணியமைத்த யாப்பிலக்கணத்தாலெழுந்த சொல்லடுக்குகளல்ல. வாக்கியலால் இவரது செவிக்கினிய ஒவ்வொரு சொல்லும் ஒலியும் மெல்லியலு முடையவாய் நடந்து பொருளும்

*Ode to Skylark ன் தமிழ் மொழிபெயர்ப்பு

அவ்வண்ணமே அமைந்து கிடக்கின்றது. புட்கள் பாடுவதுபோல் இவ்வியற்கவி வானம்பாடி (Ode to Skylark) என்ற பாட்டில் இயல்பாக இசைக்கின்றதனுன் இப்பாவில் படிகின்றவரது சிந்தை சொல், செயல்யாவும் அமைவுற்று ஒருமை நலமெய்து மென்பது கண்கூடு.

வாழ்கவான் பாடியே! வளமுடன் வாழி!!
வானகஞ் சார்ந்தோ வான்புறத் தமர்ந்தோ
தாழ்வின் மனதில் தானெழு மிசைதனை
ஓய்விலா துகுக்கும் ஒண்புள் ளலநீ!
பண்முறை நாடிப் பாரகம் பாய்ந்து
வண்ணமார் நீல வான்கடல் மிசையே
பாடியே நின்று பறந்திடக் கற்றுப்
பறந்திடு நிலையில் பாடுதல் புரிவோய்!
கோலமா முகில்கள் குலவியே மறைத்திடுஞ்
சால்புடை யிரவிதன் சார்பொளி பரவுமக்
காலம திடையே கவினுறுங் களியுடைச்
சீருடைப் படிவமெனத் திகழ்ந்தொளிர்ந் தோடுவாய்;
பாங்குடன் வட்டம் பன்முறை யிட்டுசெம்
மாலைப் பொழுதினில் மறைந்திட உருகி
பகன்மறை விண்மீன் பான்மையி னின்னை
கண்ணுற யாருங் காணில ரெனினுந்
தெள்ளிய வுதயத் திகழ்பொழு தினிலொளி
யகன்றிடக் கண்டுமாண் டவனுள தெனயாம்
உள்ளத் துணருமவ் வெள்ளியின் கூர்கதிர்*
ஒத்தநின் கூரிசை யுவப்புறக் கேட்பேன்;
மாசி லிரவிலோர் மாமுகி லிடைதனில்
மாமதி தண்கதிர் மாகமே யெல்லாம்
வீசிட நிறைந்து விளங்குவே மாழ்கிடும்
விண்ணகம் மண்ணகம் விளங்குநின் னிசையால்
இன்னது நீயென இனிதறி யேமுனக்
குலகினி லொப்பிலா யுயர்வுடைப் பொருளெது?.
வன்ன முகத்தொளி ரீன்னிசை மாரிபோல்
வானவில் மேகமும் வழங்கில மழையென
ஏற்றுறு முறுதி யேக்கமோ டிவைபுவி
ஏத்துறூஉம் வகைபிற ரேவிடாச் செயலால்
எள்ளலில் தெள்ளிசை யின்புறப் பாடிடும்
எண்ணத்தி லாழ்கவி யெழிலுடை வாணனே!
தன்ன துறையுள் தகைமலி நடுநிசி
தன்னந் தனியாத் தகைவேட் கையென
மன்னிய இசையால் மாண்புறு காதல்
மன்னுறத் தணித்திடும் மால்தரு மாடம்
உற்றிடுங் குலமுயர் உரன்சால் மாதோ!
தனைமறைத் திடூஉந் தழைபுற் பூவினுந்

*The construction is some what involved and complicates the comparison.

தகைசேர் மின்னொளி தானே பரப்புமப்
பனியுறு மவலதில் பரவிடும் பொன்னிறந்
தணிவிலா மின்மினி தானென நவில்வனே!
மூடிடு மிலைக்குள் மூழ்கி வெய்யமா
மூசிளங் காற்றால் முன்பிதழ் விரித்து
நாடிடுங் கள்வனுந் தென்றலும் நாணிட
நாறிடு மணஞ்சால் நலமல் லிகையோ!
மின்னிடு புல்லதன் மீவே னிற்றுளி
தன்வீ ழொலியினுந் தகைமழைப் பூவினு
மின்ப மளிப்பவாய் இங்குள யாவினும்
இயைந்துமே லெழுநின் னிசையென நின்றிடும்
வாழ்க! வான் குருவியே! வாழ்க! இன் புள்ளே!
மாழ்குநின் னின்பச் சிந்தனை மனத்தென்?
மாமது வுண்போன் மாக்கள், துதிதனில்
காழ்த்த வின் காதலன் காதற் பாவிலுன்
தீஞ்சுவை மிகுமிசை திகழ்தரக் கேட்டிலேன்!
திருமண வாழ்த்தைத் திருச்சே ரிசையை
திகழ்தரு முன்றன் தேய்வி லிசையோ
டொப்பெனக் கூறல் பெட்பிலாத் தன்மையே,
ஆழ்ந்திங் குணரின் அவையுள் ளேதோ
குறையு முண்டெனக் கூறயா னேவேன்,
எவ்வகைத் துன்பமு மெழவறி யாது நீ!
எழிலுடை யின்னிசைக் களிப்பினைக் கொளுமதற்
கென்னிலம்! எக்கடல்! எம்மலை! யெவ்விண்!
எப்புலம்! நின்னினத் தெத்தகை நேயம்
இப்பொருள் பலவினுள் எப்பொருள் மூலமாய்
எழில்பெறக் கொண்டனை எற்கியம் பிடுவாய்!
குமிழ்த்தநின் கூரிசை குவலயங் கேட்டுச்
சோகமுந் தவிர்ந்து சோர்வு மற்றிடும்
மனமதி லன்புடை மாண்புறு நினதுளம்
நைதர நலித்திடும் நலவன் போர்ந்திலை,
உறங்கியோ விழித்தோ உளபரி சோர்ந்தோ
சாாலை உணர்ந்தனை சாற்றவா யிலையெனில்
நீப்பரு மின்னிசை நீயரு விப்புனல்
ஒப்புற வகலிடம் ஓவற நிரப்புவாய்,
இறப்பெதிர் வெண்ணி யேங்கியில் பொருட்கு,
இரங்குவம்; நமதிடை யெழுந்திடும் மகிழ்வு
துன்பக் கலப்பாம் சொல்லின் நமக்கு,
இன்பப் பேரிசை ஈடிலாச் சோகம்
இன்பமில் பாவென விலங்கியே நின்றிடும்,
அச்சம் பெருமிதம் அழுக்கா றகலினும்
ஆவலின் கண்ணீர் அருவியின் னுகுக்கயாம்
இங்கே தோன்றில னெனின்நின் இன்களி
எப்படி யேற்பபே னெனும்வகை யறியேன்
இன்பம் விளைத்திடு மின்னிசை பலவுளும்

நூற்பொதி பொருள்களின், நுவலுமா நின்சீர்
இசையே மேலென ஏற்பார் பாவலர்
மன்பதை வதிந்திடு மாபுவி இகழ்வோய்!
இன்னேயா னின்னிசை கேட்டிடல் போல்
உன்னுள மோரு முவகையிற் பாதி
செப்பினு லென்னிதழ் சீருற நின்றெழும்
செவ்விய இசையைச் செவியுறு முலகே.

அரசருள் ஏறு

மீனவன், கரந்தை.

அறிஞர் எழுதுகின்ற செய்யுட்களையே உரையாயினும் பாட்டாயினும் உலகம் ஏற்று நல்லவையெனப் பாராட்டா நிற்கும். சான்றோர் எழுதியவையே கசடறக் கற்பதற்குரிய 'கற்பவை' யாகும்.

அன்னரது செய்யுட்களை இருவகைப்படுத்துக் கலை (Art) என்றும் நூல் (Science) என்றும் மக்கள் போற்றுகின்றனர். இலக்கியச் செய்யுளும் கலைப்பகுதியில் அடங்குவனவேயாம். இரசாயனம், பௌதிகம், மொழியிலக்கணம், அரசியல், ஒழுக்கமுறை, வான நூல், தத்துவ ஆராய்ச்சி முதலியன நூலுள் அடங்குவன.

காலம், இடம், மக்கள், மனப்பண்பு முதலியவற்றிற்கேற்ப மாறுபாடெய்தி, அவ்வப்போது தோன்றும் கருத்துக்கள் பொதிந்த கருவூலமாய்ப், பலவித சொற்பொருள் நயக்குழுவாம் பூண்களணிந்து, கலைச்செய்யுள் வெவ்வேறு வேடங்கொண்டு நடிக்கும் பொருநரை மானும். நூலோவெனின், அவ்வாறின்று. எக்காலத்திற்கும் எத்தகைய பண்புள்ளாருக்கும் ஒத்த நிலையில், இயற்கையிலுள்ளதை யுள்ளவாறுரைக்கும் உயர்நலத்ததாம். இவற்றுள்ளும் சிற்சில வாசிரியரின் உண்மையுணருந் திறத்தின் குறைபாடுகளடங்கிய கருத்துக்கள் அன்னருக்குப் பின்னர், ஆராய்ச்சி செய்யுமறிஞரால், மாற்றப் பெறுவனவுள. என்றும் குன்றுநிலையிலுள்ள நூல்கள் ஒருசிலவேயாயினும், அவற்றுள் தலைசிறந்து விளங்குவது நமது தமிழ் மறையாகும். இச்சிறப்பு யாதுபற்றியோவெனின், எங்கும் எப்போதும் மாறுவியல்பு கொண்ட, அடிப்படையுண்மைகளை (Fundamental truths) அளந்து அறிவித்துக் கலைநயமுந் தோன்ற, இலக்கியமோ வென்றுரோவழி கற்பார் கனிந் தின்புறுமாறு யாத்ததினுலேயாம்.

"நூலாசிரியன் இறந்தபிறகும் ஐம்பதியாண்டுகள்வரை யழியாது ஒரு நூல் நிற்குமாயின், அதனுள் அறியத்தக்க செய்தி யிருக்கிறது என்றுணர்க." என்று எண்பத்தெட்டகவையினியங்கும் ஆங்கில

நாவலன் **ஜியார்ஜ் பெர்னுட்ஷா** கூறியுள்ளதற்கேற்பக் கணக்கிறந்த ஐம்பதியாண்டுகளைக் கண்டும், கருத்தூன்றிப் பயில்வார் பலராகக் கவின்பெற்றிலகுவது நம் தமிழ்மறை.

இத்தகைய அழியா நிலையுற்றும் இந்நூல் குற்றமற்றதென ஏற்கப் பெறும் நிலையில் முழுதும் இல்லையென அறிஞர் சிலர் குறிப்பதை மக்கள் அறிவர். ஓரோவழி நோய் நீக்காது பிறிதொரு நோய்க்கும் வழி கோலிற்றென்று, நோய் தீர்ப்பானுழைச் செல்வானொருவன் மருந்தினைக் கடிந்தனனாயின், அம்மருந்தின் உயர்வினையும், அம்மருந் தூட்டிய "நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச்" செயும் நெறிநில்லாத் தீர்ப்பானின் குற்றத்தையும் செவ்விதினறிந்த வொருவர், இவ்வுண்மையை விளக்கி மருந்தின் சிறப்பினை நிறுவுதல் வேண்டும். அன்றி மருத்துவ நெறிகல்லாத் தீர்ப்பானது நடிப்பில் மயங்கி வாய்திறவாதிருப்பின் குறைப் பெயருற்றது மருந்தின் குற்றமாமா? இத்தகைய மருந்தொப்ப நமது தமிழ்மறையும் சிலருடைய குறைகூறலுக் குட்பட்டுளது.

வள்ளுவர் செய்த திருக்குறளுக் குரைவகுத்தார் பதின்மரென்ப. அச்சிலிருப்பன விரண்டே. மற்றைய எட்டும் வெளிவருதற்கு முன்பேயே யாரோவொருவர் "நூலிற் பரித்தவுரையெல்லாம் பரிமேலழகன் தெரித்த வுரை யாமோ தெளி" என்று பரிமேலழகியாருக்கு விளம்பரச் சீட்டொன்று தயாரித்துவிட்டார். இதனையும் பரிமேலழகியாரது உரைநடை யொழுக்கினையும் கண்டு மயங்கி, அவரது கூற்றில் கருத்தூன்றிப் பயின்றவருள், எவரேனும் தவறுகண்டு மாறுசொல்ல முன்வருங்கால் "வள்ளுவர் சீரன்பர்மொழி வாசகந் தொல்காப்பியமே, தெள்ளுபரிமேலழகர் செய்தவுரை ஒள்ளியசீர்த், தொண்டர் புராணம் தொகுசித்தியோராறும், தண்டமிழின் மேலாந் தரம்" என்று சமயப்பனுவலுடன் ஒருபடித்தாய் வைத்துயர்த்துப் பாடிய உமாபதி சிவாச்சாரியாரின் வாக்கு முன்னின்று அவர்களது உறுதியினைக்குலைக்கின்றது. பரிமேலழகர் வைணவராயினும் மொழியுரைநடைச் சிறப்பால், சைவசமயத்தாரின் சார்பில் நிறைவுகொண்டிலங்குகிறதவருரை.

தமிழையே கடவுளாகக்கொண்டு வாழ்த்துப்பா வியற்றியுள்ள **பேரறிஞர், சுந்தரம் பிள்ளையவர்கள்** "வள்ளுவர் செய்திருக்குறளை மறுவறநன் குணர்ந்தவர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி" என்று வன்மையாக மற்றைய நீதி நூற்களைக் கண்டித்துக் கூறியிருப்பினும், பரிமேலழகர் உரைப்பாயிரத்துள், "அறமாவது மனுமுதலிய நூற்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாகும்" என்றுஎழுதியிருப்பதையே கற்றுத்துறைபோய அறிஞர்பலர் மீண்டும்மீண்டும் சுவைப்பதைக் காண்கின்றோம். என்றுலோவெனின், சிலயாண்டுகட்கு முன்வரை தமிழ்மொழியில் இலங்கும் நூல்கள் அத்துணையும் சம்ஸ்க்கிருதச் சாஸ்த்திரக் கருவினின்றும் தோன்றியவையே எனும் கோட்பாடு மிக்கிருந்தமையான், ஆரியச்சாஸ்திரமாய மனுவினை அடிப்படையாகக் கொண்டே தமிழ்மறையும் யாக்கப் பெற்றிருத்தல் வேண்டும் என, மற்றையவரும் நம்பினர்.

நூலாசிரியரிடம் பாடங்கேட்ட மாணவரோ அன்றி அவர்காலத் தவரோ, ஒரு நூலுக்குரையெழுதின், அஃதுண்மை யுரையாகும். அதான்று, உரைசெய்யப்பெற்ற நூல், வழிநூலாகுமாயின் அதனுட் கூறப்படும் செய்தியின் உண்மைநிலையை, முதல் நூற்கருவியால் இற்றெனக்கிளக்கவியலும். இவ்விருநிலையிலும் நில்லாது, ஒரு சிறந்த நூல், ஓர் உரைவகுப்பார் கையிற்பட்டுழி, ஆசானின் உள்ளக்கிடக் கையைத் தெற்றெனக் கூறல் அன்னருக்கியலாதாகும். எனவே உரையாசிரியர் தனக்குத் தோன்றும் கருத்துக்களை வெளிப்படுத்திப் பிறர்க்கும் வாய்ப்பமைப்ப தோடமையவேண்டும். அதுவே, நேர்மையாகும். அதற்குமாறாக இன்னமுறையைத் தழுவி நூல் யாத்தாரென்றோ, இன்ன கூற்றை விளக்குகின்றாரென்றோ இல்லாதவொன்றை வுண்மையாம் படித் திருத்திக் கூறுதல் நூலாசிரியருக்கு ஊறு செய்வதோடன்றி, மக்களை மயக்கும் குற்றத்திற்கும் துணிந்ததாகும். இத்தகைய துணிபு மிகுதியுமுடையார் பரிமேலழகரென்பது, வினைத்திட்பமென்னும் அதிகாரத்துள்,

ஊறொரால் உற்றபின் ஒல்காமை யிவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்,

என்ற பாட்டில், ஆய்ந்தவர் கோளென்பதற்கு தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சு பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதி நூலுடையார் கூறியவாறு வள்ளுவர் கூறுகின்றதாகச் சிறப்புரை வகுப்பதினின்றும், இதுபோன்ற பிறவிடங்களிலும் உரை விரிப்பதினின்றுந் தெரியக்கிடக்கின்றது.

தமிழ் மக்கட்குத் தனிப்பட்டமுறையில் நீதிநூல் கிடையாதென்றும், தலையாய தமிழ்மறை யெனப்பெறுவதும், ஆரிய நீதிநூல் வழிவந்ததே யாமென்றும், உறுதிப்படுத்தும் நோக்கமே இக்கூற்றெழுதற்குரிய காரணமாமென்றல் தவறாகாது. தானுரை வகுக்கும் நூலுக்கு இவ்வகைக் கூற்றால் இழுக்கேற்படுமென்பதை பரிமேலழகர் அறியவில்லையோ! அன்று! அன்று!! அறிந்தே குறித்தெழுதுகின்றாரென்பதற் கொரு சான்று காட்டுவாம்.

படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையா னரசருள் ஏறு

என்னும் பொருட்பால் முதற்பாவினுக் குரைவகுக்குங்கால் 'அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாயினும், ஈண்டுச் செய்யுள் நோக்கிப் பிறழவைத்தாரென்றும், இவற்றிற்கு அங்கமென வடநூலார் பெயர்கொடுத்தாரெனவும் எழுதியதோடமையாது, அங்கவியலில் அதிகாரங்களையும் அம்முறைப்படிப் பரிமேலழகர் அமைத்துள்ளார்.

இங்கு ஆரியச் சாத்திரத்திற் கூறிய அங்கங்களின் முறைவைப்பையே அளவாக்(Standard)கொண்டு '**முறையாயினும்**' என்றெழுதிச், '**செய்யுள் நோக்கிப் பிறழவைத்தா**' ரென்பதனாற் குறளாசிரியருக்கு, ஆரியரது முறைவைப்பே யுடன்பாடென்பதனையும் பெறவைத்தார்.

அரசன் தனக்கு அறவுரையும் அறிவுரையும் பகர முதற்கண் அமைச்சனைத் தேடிக்கொள்ளல் வேண்டுமென்னும் கருத்துத்தோன்ற

ஆரிய முறைவைப்பிலே அமைச்சு, முதல்நிலையடைகின்றது. மற்றைய அங்கங்கள் பெருவழித்தனிமனிதனைத் திடீரென்று மக்கட்குழு வொன்று தான் வணங்கிப் பணிதற்குரிய அரசனாக ஏற்றுக்கொள்ளுதலியற்கையிற் காணப்பெறுதது. ஆனால், கௌடல்யரின் அர்த்த சாத்திர வரலாறறிந்தவர்கள் கவுடல்யனெனப் பெறும் சாணக்கியன் நாடோடியாயிருந்த குப்தர்களை அரசாக்கொண்டு பலவித தந்திரங்களால் நந்தர்களை அழித்துக் குப்தராஜ்யத்தை நிலைபெறுத்தவில்லையா? என்று கடாவிடுப்பின், அன்னாருக்குக் குப்தர்கள், சாணக்கியன் உறவுக்கு முன்பே அரசகுடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்றறைகின்றோம்.

அமைச்சின் உதவிமட்டிலுங் கொண்டொரு நாட்டினைக் கைப்பற்ற வியலுமா? அன்றி அரணமைக்கவும், பொருளீட்டவும், தனி மனிதனின் முயற்சி அமையுமா? மற்றைய அங்கங்கள் ஓரோவழி அரசனுக்கு மாறுபடும் நிலையில், அமைச்சுமட்டில் அரசனுக்கு என்ன உதவிசெய்யவியலும்? இம்முறை வைப்பை யூன்றிநோக்கின், இஃதியற்கைக்கு மாறுபட்டதென்பதும், குறைபாடுடைய தென்பதும் அறிஞர் நன்குணர்வர். இத்தகைய குறைபாடுடைய முறைவைப்பு குறளாசிரியருக் குடன்பாடாமாயின் அன்னார்பிறழவைத்ததுசெய்யுள் நோக்கியோ? அற்றன்று. இயற்கையை யிற்றெனக் கிளக்கு மிறைமை நூலாசிரியராகலின், அவரது முறைவைப்பு இயற்கைக்கு முரண்படா தெந்நாட்டவருமின்றுங் கண்டு வியந்து போற்றி யுண்மையெனப் பின்பற்றற்குரிய நெறியாகும். எவ்வாறெனின், வரலாறு காட்டுதும்.

தனி மனிதன் சிறப்புறற்கு, யாரேனும் சிலரால் சூழப்பெறும் நிலையிலியங்கல் வேண்டும். நான்குபேர் பின்போகவில்லையானால் அம் மனிதனுக்குச் சிறப்பின்று, அவனது சொல்லும் ஏறுது. பிறருக் கூறுசெய்யக் கூடிய படைக்கலம் ஏதேனுமிருப்பின், அஃதுடையார் மாட்டு மற்றவர் அச்சங்கொண்டு அவர் ஆணைவழி யொழுகுவர். படைக்கலமுடையார் பலரை யொன்று சேர்த்துச் சிறுபடை திரட்டிக் கொண்டால், தனியொருவன் செய்யவியலாதன எளிதிற் கைகூடும். அவ்வவ்விடங்களிற் சென்று தமக்குவேண்டிய உணவு அணிகலன் முதலியன பெற்றுக் கொள்ளவியலும். படையுடையார் கூற்று நடைமுறையாகும் நிலையுண்டாம். இம்முறையை அட்டில்லா போன்ற பெரிய வீரர்களது வாழ்க்கையிற் காண்கின்றோம். மராத்திய மன்னன் சிவாஜியினது வாழ்க்கையின் துவக்கமும் இத்தகையதே. இரண்டாவது சோழராச்சியத்தை நிறுவிய விசயாலயனும் ஒரு சிறு படையினுதவியினாற்றான் முதற்கண் தஞ்சையையும், அதற்கணித்தே சில விடங்களையும் கைப்பற்றினான். இவர்களெல்லாம், அமைச்சை முதலில் தேடிக்கொண்டதாகத் தெரியவில்லை.

வெறும் படைவலிமட்டு மிருந்து பலவிடங்களிலுஞ் சென்று இறுத்து உண்டு உரம்பெற்று உறுபொருள் சேர்த்துளமகிழ் கொள்ளின், அப்படைத்தலைவனைக் கொள்ளைக்காரனென்றுலக மிகழும். தான்தேடிய கொள்ளையை ஒரு குறிப்பிட்ட மக்கட் டொகுதிக்குப்

பாத்தளித்து, அன்போடணைத்துத் தன்பால் அவர்களடங்கி
நடக்குமாறு ஆணை செலுத்தி அவர் நடுவண், தானும் குடிகொண்டு
வாழின், அத்தலைவன் அவர்கட் கரசனும் நிலையுறுவன்.

படைவலங்கொண்டு குடிதழீஇ வாழும் நிலையில் கொள்ளை
யுண்டிவாராக்காலத்தும், உண்டி யுடைமுதலியன, தனக்கும் தன்
குடிகட்கும், சேர்த்துவைத்துக்கொள்ளும் கடப்பாடுடையன் தலைவன்.
ஏனெனில், தன்னை நோக்கிவாழும் மக்கட்கு இடையீடின்றி வேண்டு
வன உதவினாற்றான், தன்னினின்றும் நீங்காது படையினையும், தன்
னாணை மீறாது குடிமக்களையும் நிறுவலியலும். இதனை யோர்ந்த தலை
வனது நாட்டம் கூழ் நிறைந்த பண்டாரம் பல படைப்பதிலும், கரு
வூலங்கள் சமைப்பதிலும் செல்லுவதியற்கையே.

இங்ஙனம் பலதுறையிலும் தன் கருத்துச் செல்லவேண்டிய நிலை
யில், தனக்குறு துணையாக நம்பிக்கைக்குரிய ஒரு மனிதனைப் பலவித
உபாயங்களாலும் தெரிந்து, அமைத்துக்கொள்ள வேண்டியவனாகின்
றான் தலைவன். அலுவல் மிகுதியினால் தன்திறம் திரிந்துழி தன்னாற்
றெளிந்தமைக்கப் பெற்ற மனிதன் தனக்குறுதி கூறும்கடப்பாடுடைய
னென்பதையும் தலைவனுணர்ந்தே அதற்குத்தக சிறந்த மதிநுட்பமும்,
நூலறிவும், சொல்வன்மையும், சோர்வின்மையு முடையானொருவனை
அமைச்சனாகக் கொள்வான். இவனுடைய உதவியினால் பலவித ஆணை
முறைகளையும் பொருளீட்டும் நெறிகளைம், படைபெருக்கும் வாய்ப்
புக்களையும், குடியோம்பும் வழிகளையும், செம்மைப் படுத்திக் கொள்
வான் தலைவன். இப்போது அவனது உலைவிலா உழைப்புச் சோர்வாழ்
வில் சிறிது ஓய்வுகிடைக்கு மாகையால், பலவிதகலைகளையாய்ந்து
பேணுந்துறையிலும், காலங்கழிக்க ஏதுவாகும். அந்நிலையில் அரசு
சிறப்புறும்.

சிறப்புற்றிருப்பினும், மன அமைதி அரசனுக்குண்டாவ தெளி
தல்ல. ஏனெனில், பலவிதமான அலுவலிடையே தன்னைப் போன்று
படைவலியால் செருக்குற்றிருக்கும் தலைவர் பலர், தன்னாட்டினுக்
கணித்தேயிருப்போர், திடீரென்று தன்னாட்டின்மீது படையெடுத்துக்
கொள்ளையடிப்பரோவென்ற அச்சமுண்டாதலியல்பு. இதைக் கருதித்
தன்னாட்டிற் கருகிருக்கும் தலைவருடன் உறவு கொள்ளுதற் கேற்ற
முறையில் உடன்படிக்கை செய்து கொள்ளுவான். அத்தகைய நட்
புரிமையினாற்றான் நாட்டிற்குறும் தீங்குகளை நீக்கவும், மன அமைதி
யுடன் பல்லாறறானும் நன்றாக்கவுமியலும். தனக்குத் துணைவலி
யாகிய நட்பினைத் தேடிக்கொள்ளுதற்கு "பிரித்தலும் பேணிக்கொள
லும் பிரிந்தார்ப் பொருத்தலும்" வல்ல அமைச்சினைப் பயன்படுத்திக்
கொள்வான்.

துணைவலிக்காக உறவுடன்படிக்கை செய்துகொண்டு கோலோச்
சும் நிலையில் யாதானுமோர் அற்றத்தான் தன்பால் மாறுகொண்டு,
அத்துணையாவான் தன்னாட்டின்மீது படையெடுத்து வருதலும் கூடு
மென்பதைத் தனது கூரிய மதியாலுணரும் அரசன், தன்னிருக்கை
யாகிய நகரத்துக்கு மதில்அகழ் முதலாய அரணும், நாட்டினைச்சுற்றி
லும் மலை, காடு, நீர் முதலிய அரணும் அமைத்து எச்சரிக்கையா
யிருப்பான். இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வோரங்கத்தின்

தன்மையையும் தன் பயிற்சியிஞலறிந்து செம்மைப் படுத்தி ஒன்று கூட்டி அரசியல் நடாத்துபவன் எஞ்ஞான்றும் வீறெய்தாது தாழவு மியலுமா? இந்த இயற்கையுண்மையையே இயற்கை மறை இயம்பும் நமது குறளாசிரியர் நிரல்பட அமைத்துள்ளார். இம்முறை இக் காலத்து நிகழ்ச்சிகளிலும் பொருந்தி யுண்மையாகின்றது. இற்றை ஞான்று உருசியநாட்டிலும் செருமானிய நாட்டிலும், இதே முறையிற் ருன் அரசியல் வீறு கொண்டுள தெனின் அது தவருகாது.

"ஆறுமுடையா னென்றதனுல் அவற்றுள் ஒன்றில் வழியும் அரசநீதி செல்லாதென்பது பெற்றும்" என்கிருர் பரிமேலழகர். உண்மை ஆரிய முறைப்படி வைத்து நோக்குங்கால் ஆறங்கங்களும் ஒன்று கூடின வழியேதான் அரசனென்னும் தகுதிக்குரியவனுவான். ஏனெனில் ஐந்தாவது நிலையிலிருக்கும் படையின்றேல் முதல் நான்கங் கங்களு மிருந்தும் பயனில்லை. இது கருதித்தான் தமிழ் மறையார் முதற்கண் படையை வைத்தோதினுர். ஆகவே அரசநீதி செல்லா தென்பதை "**அரசருள்ஏறு**" என்னுஞ் சொற்ருெடர் குறிக்கின்ற தெனின் நகைப்புக்கிடமாகும். ஆறுமுடையானரசு என்று கிடத்தலே சாலும்.

பின்னர் அரசருள் ஏறு என்றுயாது கருதிக் கூறிஞரோவெனின், ஆறங்கங்களில் ஒன்றிரண்டில் வழியும் அரசனுவான். ஆனல், அரசர்க்கரசாம் நிலை இவ்வாறுமில்வழி யில்லையென்று குறிப்பதற் கேயென்பது தேற்றம். பொய்யா மொழியார் முறைவைப்பின்படி படைமுதல் படிப்படியாக அரசனின் பெருமையும், வன்மையும், ஒவ் வோரங்கத்தையும் பின்னரெய்த எய்த சிறந்தேற்றங் கொண்டு விளங்குவதைக் காணுகின்ருேம்.

இந்த இயற்கை முறைவைப்பிற் கேற்ப அதே அதிகாரத்தில்,

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானும் வேந்தர்க் கொளி

என்ற மற்ருெரு பாட்டமைத்துள்ளார். முதற்பாட்டில் ஓரரசன் வீறு பெறுதற் கின்றியமையாப் புறவுடைமைகளைக் குறித்து இப்பாட்டில் பண்புகூறி, அப்பாட்டின் முறைவைப்பினை நிறுவுகின்ருர். படைக்கு மிகுபொருளுதவுங் கொடையுடையான் மாட்டே படை உண்மையா யுழைக்கும். இவறின் படையுழைப்புக் குன்றும். இன்றும் படை மக்கட்குயர்வாய ஊதியம் தரப்பெறுதல் இது கருதியேயாம். அப் பாட்டில் முதற்கண் அமைக்கப்பட்ட படைக்கேற்ப, இங்கும் முதற் கண் கொடை குறிக்கப்பெற்றுளது. படையினரிடத்துக் கடுமையாக நடந்துகொளலாம். அதனுற் கேடில்லை. அவர்கட்கு வேண்டிய அளவு உணவுகொடுத்துவிட்டு விலங்குகளை யொறுத்து வேலை வாங்குவது போன்று, போர்க்களப்பயிற்சிக்குரிய கடுமையான சட்டதிட்டங்கட் குட்படுத்தலாம். ஆனல் குடிமக்களிடத்தில் அன்பும் கருணையும் காட்டிஞலொழிய அவர்களது ஒத்துழைப்பைப் பெறமுடியாது.

எனவே குடிக்கேற்ப இப்பாட்டிலும் அளி இரண்டாவது இடம் பெற்றுளது.

" இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு, "

என இவரே பிறிதோரிடத்துக் கூறி யாங்கு, சூழ்சிறத்தற்கின்றி யமையாத செங்கோலை இங்கு மூன்ருவதாக வைத்தார். சூழ் அமைச்சு ஆகிய இரண்டினுக்குமேற்ப இங்குச் செங்கோல் கூறப்பட்டுளது.

மக்களைப் பேணுங்கால் புறத்திருந்து இடுக்கண் வாராதவாறு காத்தலே சிறப்புடைத்து. அதற்கேற்ப நட்பு, அரண் ஆகிய இரண்டாலும் புறத்துன்பம் நீங்குமாகையால், அதுநீக்கிக் குடியோம்புக வென்பார், அவைகட்கு நேராகக் குடியோம்ப லென்னுஞ் செய்தியை நான்காவதாக இப்பாட்டிலமைத்தார். இப்பாட்டிலும் முதற்பாட்டு போன்று இயற்கைக்கு முரண்படாதவாறு பண்புமுறையை ஒன்றற்கொன்று செவ்விதாக அமைத்து, இம்முறை மேற்கொள்வான் அரச குடிக்குப் பெருமை கொடுப்பானென்பதை விளக்குகிருர். சங்கநூற்ருெகுதியாகிய பதினெண் கீழ்க்கணக்குள் ஒன்ருகிய **திரிகடுகத்துள்**

" பத்திமை சான்ற படையும் பலர் தொகினும்
எத்துணையும் அஞ்சா எயிலரணும்-வைத்தமைத்த
எண்ணி னுலவா இருநிதியும் இம்மூன்றும்
மண்ணுளும் வேந்தர்க் குறுப்பு "

என்னும் ஒருபாட்டுளது. இதன்கண் அரசர்க்கங்க மாவனவற்றை அறுதியிடுங்கால் முதற்கண் படையையும் இரண்டாவதாகத் தறுகண்மையுள்ள குடியுங் கூழும் நிறைந்த அரணையும், மூன்ருவதாக நிதியையும் கூறியுள்ளார். " பலர் தொகினும் எத்துணையும் அஞ்சா " என்ற அடைக்கிளவியால் குடிமக்களின் வீரத்தையும் பொறையையும் நீண்டநாள் பொரினும் வெளியினின்றும் வரும் உணவு தேவையென்னும் நிலையின்றி அரணுக்குள்ளேயே பாரியினது பறம்பரண் போன்று இயற்கைவளன் மிக்குடைய தென்பதையும், சூழ்தலில் வல்ல அமைச்சையும், தலையகலமும் ஆழமும் படைத்த மதிலும் இயற்கையோடொன்றிய அரணுங் கொண்ட தென்பதையும் பெற வைத்தார். இங்கும் வள்ளுவரது முறைவைப்பே பின்பற்றப் பெறுவது காண்க.

இனி உலகத்திற் குயிராவதெது என்பதை விளக்கப் போந்த **மோசிகீரனர்**

" நெல்லு முயிரன்றே நீருமுயிரன்றே
மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனல் யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே "

என்று அரசனது இன்றியமையாமையைத் தெரிவிக்கப் போந்தவர், ' வேன்மிகு தானை ' என்ற அடையால் அரசனது அரசியலுறுப்புக்

களுள் படை முதன்மையாவதற்குச் சான்று பகர்கின்றார். இங்கு அமைச்சையோ அன்றி மற்றைய அங்கத்தையோ குறிக்காது படையையே குறிப்பது அக்காலத்துத் தமிழரசியலது இயற்கையமைப்பினை வலியுறுத்துகின்றது.

இத்தகைய இயற்கையோடொன்ற உண்மைகளைக்கிளத்துவதால் நம் தமிழ்மறை தாவாப்புகழ்கொண்டு எங்கும் என்றும் தவழும் தலைமைசான்ற நூலா யிலங்குகிறது. இயற்கைக்கு மாறுபடப் பலவிடங்களில் பரிமேலழகர் உரையெழுது மாற்றால், இக்காலத்தறிஞர் தமிழ் மறையிலும் குற்றம் காட்டும் நிலைக்குப் பொய்யாமொழியை உய்த்துள்ளாரென்பதற்கு வாய்ப்பேற் படுங்கால் இன்னும் சான்று காட்டுதும்.

இதுகாறுங் கூறியவாற்றால் இயற்கையைக் கிளத்தலே நூலென்பதும், அந்நூற்றொகையுள் அடிப்படையுண்மைகளை அறிவித்தலான் திருக்குறள் வான் புகழ் கொண்டதென்பதும், உரை வகுப்பார் நூலுட்காண்பதைத் திரித்துக்கூறாது உள்ளபடி உரைத்தல் வேண்டுமென்பதும், அதனால், மற்றைய கருத்துகட்கு மிடமேற்பட்டு நூலின் பரந்த பொருள் உலகறிய ஏதுவாகுமென்பதூஉம், ஆரிய அடிப்படையைக் குறளுக்குக் கற்பிக்க வேண்டுமென்னும் குறுகிய எண்ணத்தோடே பரிமேலழகர் உரை வகுத்துள்ளா ரென்பதூஉம், அதனைப் பொருட்பால் முதற்பாட்டிற்கு அவர் உரைகண்டிருக்குமுறை வெளிப்படுத்துகின்ற தென்பதூஉம், குறளாசிரியர் முறைவைப்பே இயற்கையோ டியைபுடைய தென்பதூஉம், அதற்கேற்ப 390-வது பாட்டும் அமைந்துள தென்பதூஉம் திரிகடுகம், புறநானூறு முதலிய நூற்களில் காணும் பாட்டுக்களும் சான்றாக அமைகின்றன வென்பதும், இதுபோன்று குற்றங்களை நீக்கி நேர்மையான உரைகாண்டல் அறிஞர்கடன் என்பதூஉம் பெறுதும்.

(தொடரும்)

பேரறிஞர். வீரத்திரு. A. இலக்குமணசாமி முதலியார் வருகை.

11—1—'45 காலை *10*-மணியளவில் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேரறிஞர். வீரத்திரு. A. இலக்குமணசாமி முதலியார் அவர்கள் நம் கரந்தைப் புலவர் கல்லூரியைக் கண்காணிப்பான் வேண்டி வந்தருளினார்கள். அதுபோது நம் சங்கத்தலைவர் இராவ்பகதூர் A. Y. அருளாநந்தசாமி நாடார் அவர்கள் முதலியார் அவர்களை வரவேற்று மாலையணிந்தார்கள். பேரறிஞர் வீரத்திரு இலக்குமணசாமி முதலியார் அவர்களை வரவேற்கு முகத்தான் இராவ்சாகிப் ஐ. குமாரசாமிப்பிள்ளை அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்:

"மாண்புமிக்க சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களே! தாங்கள் எங்கள் கல்லூரியைக் கண்காணிக்க இங்கெழுந்தருளியமை குறித்து யாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். தங்கள் வருகையால் எங்கள் கல்லூரி பெருநலன் பெற்றுச் செழித்தோங்குமென எண்ணுகின்றோம். காலஞ்சென்ற செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், இராவுசாகிபு. த. வே. உமாமகேசுரம் பிள்ளை அவர்கள் மிக்க முயன்று இக்கல்லூரியை நாட்டினார்கள். இக்கல்லூரியின் வளர்ச்சியில் காலஞ்சென்ற சர். A. T. பன்னீர்ச் செல்வம் அவர்கள் மிகுந்த நாட்டங்கொண்டு ஆவனசெய்ய முற்பட்ட பொழுது துடுமென மறைந்து விட்டார்கள். அவரின் பின் தமிழவேள் அவர்களும் மறைந்துவிட்டார்கள். இவ்விரு பெரியோர்களின் எண்ணமாக எண்ணத்தின் குறியாக இன்று நின்று இலங்குவன இச் சங்கமும் இதனைச்சார்ந்த நிறுவனங்களுமாகும். இவ்விருவரும் கடைசி முறையில் கருத்தைச் செலுத்தி எவ்வாற்றாலேனும் தஞ்சை மாநகரில் ஒரு தமிழ்க் கல்லூரியை நாட்ட வேண்டுமென உறுதி பூண்டனர். அவர்களின் உறுதியான எண்ணத்தின்மேல் விளைந்த இக்கல்லூரி தளர்வுறாமல் வளர்ந்தோங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு யான் ஒரு புலவன் அல்லேனாயினும் இச்சங்கப் பணியில் ஈடுபட்டு உழைத்து வருகின்றேன். யான் ஒரு புலவன் அல்லனாயினும் எனது தந்தையார் பெரும்புலவராக இலங்கினார்கள். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களுடைய முதன்மாணாக்கர் எனது தந்தையார் ஐயாசாமிப் பிள்ளை அவர்களே யாவார்கள். பரம்பரையாகத் தமிழ்ப் புலமையில் ஊறிய குடும்பத்திற் பிறந்தயான் தமிழ் மொழிக்கு இடையூறு வந்த காலத்தில் தமிழ்க்கொடி தாங்கிக் கட்டாய இந்தியை எதிர்த்துச் சென்னைவரை, சென்று பல கூட்டங்களிற் சொற்பொழிவாற்றி மக்களுக்கு உணர்ச்சியை எழுப்பினேன். தற்பெருமைக்காக யான் இதனை இங்குக்கூறுவிடினும், தமிழ்த்தொண்டு செய்தலில் என் விருப்பத்தை வெளியிடு முகத்தான் இதனைக் கூறுகின்றேன். காலஞ்சென்ற தலைவர் **த. வே. உமாமகேசுரம் பிள்ளை** இரண்டு மூன்று ஆண்டுகள் தொடங்கி இக்கல்லூரியை நடத்தியும் பொருள் குறைபாட்டால் இக்கல்லூரி பல்கலைக் கழகத்தாரது ஒப்புதலைப் பெற இயலாமற் போயிற்று. பின்னர், காலஞ்சென்ற **சர். A. T. பன்னீர்ச் செல்வம் அவர்களின்** முயற்சியினாலும் தங்களது அருளினாலும், திருச்சி **T. P. வேதாசலம் பிள்ளை**யவர்களின் பொருட்கொடையாலும் இக்கல்லூரி தமிழவேளின் வாழ்நாளின் கடைசியில் சென்னைப் பல்கலைக் கழகத்தாரது தற்காலிக ஒப்புதல் பெற்று இங்கு நாட்டப்பெற்றது. காலஞ்சென்ற தலைவர்கள் சர். A. T. பன்னீர்ச்செல்வம் த. வே. உமாமகேசுரம் பிள்ளை இருவரும் விட்டுப்போன இவ்வரும் பணியை அவர்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றி யான் என்னால் இயன்றவரை மேற்கொண்டு ஆற்றி வருகின்றேன். எம்பணி முற்றுப் பெறுதற்குரிய பொருள்வசதி வாய்க்கப் பெறாமையால் தளர்வுறுகின்றோம். பொருள் வசதி கிடைப்பின் முத்தமிழ் என ஏட்டில் எழுதியிருப்பதோடல்லாமல் முத்தமிழும் இங்கு முழங்கும் முறையில் ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகமாக இச்சங்கந் தோற்ற மளித்தலாமென எண்ணுகின்றேன். இக்குறைநீங்கி இப்புலவர் கல்லூரி கலைவளன் சிறக்கத் தங்களைப்

போன்ற பெரியோர்கள் எங்கட்கு எல்லா வகையான உதவிகளும் புரிய வேண்டுகின்றேன். மேன்மை தங்கிய சென்னைக் கவர்னர் சர். ஆர்தர் ஹோப் அவர்களை நேற்று யான்கண்டு உரையாடிய காலத்தில் தமிழ் நாட்டின் நடுநாயகமாயிலங்கும் இத் தஞ்சை மாநகரில் அமைந் துள்ள எங் கரந்தைப் புலவர் கல்லூரியை ஒரு பல்கலைக் கழகமாக்க அரசாங்கத்தார் ஆதரவு தரவேண்டுமென வேண்டிக் கொண்டேன். கவர்னர் அவர்களும் போர் முடிந்தவுடன் இதுகுறித்துக் கருதுவோ மென மறுமொழி கூறியுள்ளார்கள், எங்கள் கல்லூரியின் நற்பேற் றிற்கு அறிகுறியாகத் தாங்கள் இவண் எழுந்தருளி யுள்ளமையின் எங்கள் கல்லூரி எல்லா நலனும் பெற்றுச் சிறந்தோங்குமென எண்ணுகின்றேன். தாங்கள் அடுத்தடுத்து எங்கள் சங்கத்திற்கெழுந் தருளி எங்கள் சங்கத்தையும் கல்லூரியையும் சிறப்பிக்க வேண்டு கின்றேன்'' எனக்கூறி முடித்தார்கள்.

பேரறிஞர். **வீரத்திரு. A. இலக்குமணசாமி முதலியார்** அவர்கள் கூறிய மறுமொழி: இங்குக் கூடியுள்ள அறிஞர்களே! பெரியோர் களே! உங்கள் கல்லூரி நல்லமுறையில் தொண்டாற்றி வருகின்றதா எனக் கண்காணித்துச் செல்லுதற்கே யான் இங்கு வந்தேன். நமது பெரியார் இராவ்சாகிபு. ஐ குமாரசாமிப் பிள்ளையவர்கள் பேசும் பொழுது கல்லூரி வளர்ச்சிக்குரிய பொருள் இல்லாமையால் பணிகள் செவ்வனே நடைபெறாமல் தடைபெறுகின்றன எனக்கூறினார்கள். பெருஞ்செல்வர்களும், பெருநிலக்கிழவர்களும், குறுநில மன்னர்களும் குழுமி வதியும் இத்தஞ்சைமா நாட்டில் ஒரு கல்லூரி நடத்தற்கு இவர்கள் பொருளுதவி செய்து இக்கல்லூரியைப் புரக்காதிருக்கின் றனர் என்பதைக் கேட்க யான் வியம்பும் வருத்தமும் அடைகின்றேன். எதிர்காலத்திலேனும் செல்வர்களின் ஆதரவு பெற்று இக்கல்லூரி தழைத்தோங்க வேண்டுமென வேண்டுகின்றேன்.

ஒருமொழியில் மட்டும் வல்லவராய் இருத்தல் போதாது. முக்கிய மாக ஆங்கில மொழியிலும் தேர்ச்சிபெற வேண்டும். உலகமொழி யாகிய ஆங்கிலத்தைப் பயிலுவதற்காகவே சென்னைப் பல்கலைக் கழகத் தில் B. A. க்குச் சமமமாக B. O. L. திட்டம் வைக்கப் பெற்றிருக் கிறது. கல்லூரி சிறக்கவேண்டும் என்று இறைவனை வாழ்த்துகின் றேன்.

பிறகு கல்லூரித்தலைவர் **திரு. பண்டித. P. R. மீனாட்சிசுந்தரம் பிள்ளை M. A.** அவர்கள் நன்றிகூறுமுகத்தான் ஆற்றிய சொற்பொழிவு: மதிப்பிற்குரிய துணைவேந்தரவர்களே! பெரியோர்களே! மாணவர்களே! இன்று ஒரு சிறந்தநாள். சென்னைமண்டிலத்திலுள்ள எந்தத்தமிழ்க் கல்லூரிக்கும் கிடைக்காத தனிச்சிறப்பு நமது கல்லூரிக்கு இன்று கிட்டியுள்ளது. **துணைவேந்தரவர்களால் பார்வையிடப்பெற்ற தமிழ்க் கல்லூரி நமது புலவர் கல்லூரி ஒன்றுதான்.** காலஞ்சென்ற பெருமக்க ளின் முயற்சியால் தோற்றுவிக்கப் பெற்ற இக்கல்லூரி இன்றுவரை நிலைத்த ஒப்புமை (Permanent Recognition) யைப் பெறுதிருப்பது வருந்தற்குரியது. கட்டிட உதவியோ அன்றி வேறுபொருள் உதவியோ இப்போது குறைந்திருப்பினும் நமது தஞ்சை வள்ளலாகிய பெரு

மகனுர் இங்கு வீற்றிருக்கும் எம் சங்கத்தலைவர் திரு. நாடார் அவர்களைப் போன்ற பெரியோர்களுடைய உதவியினுல் கூடிய விரைவில் நிறைவு பெறுமெனக் கூறுகின்றேன். பொருளிருப்பினும், மாணவர் இருப்பினும், ஆசிரியர்களிருப்பினும் பயனில்லையாம். பின்வேண்டப் படுவது நிரந்தர ஒப்புமையே. துணைவேந்தரவர்கள் தமக்குத் தமிழில் நிறைந்த பயிற்சியில்லையெனக் கூறினுராயினும், தமிழிடத்தும், தமிழ்ப்புலவரிடத்தும் எத்துணை அன்பும் மதிப்பும் வைத்துள்ளார்கள் என்பதனைப் பேராசிரியர், பண்டிதமணியார் அவர்கள் கூற யான் செவ்வையாக அறிந்துள்ளேனுகையால் தமிழ் நாட்டிடைத் தளராது தமிழுக்குத் தொண்டியற்றும் இக் கரந்தைப் புலவர்கல்லூரியைத் தலைமைசான்ற நிலையமாகச் செய்து எமது தாளாளர் கூறினுற் போன்று தமிழ்ச் செழுங்கலை நிலையமாக்குதல் இவர்களின் நீங்காக் கடமை யென்பதனைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். எங்கள் கல்லூரியைத் தாங்கள் அருள்கூர்ந்து பார்வையிட்டதற்கும், எமக்கும் எம்மாணவர்க்கும் அறிவுரை கூறியதற்கும் என் சார்பாகவும், ஏனைய ஆசிரியர்கள் சார்பாகவும், மாணவர்கள் சார்பாகவும், சங்கத்தார் சார்பாகவும், தஞ்சைமாநகரின் சார்பாகவும் தங்கட்கு அளவிலா நன்றியையும் வணக்கத்தையும் அறிவிக்கின்றேன். தாங்கள் கூறியதற்கேற்ப அடுத்த யாண்டுமுதல் B. O. L. வகுப்புக்களும் தொடங்குதற்கு ஏற்பாடு செய்து வருகின்றேம். அதனையும் கண்காணித்தருள வேண்டுகின்றேன்.

பிறகு கல்லூரித் தலைவரால் கல்லூரி ஆசிரியர்கள் துணைவேந்தருக்கு அறிமுகப்படுத்தப் பெற்றனர். துணைவேந்தருக்குக் கல்லூரித் தலைவர் சங்கத்து அலுவல்களைப்பற்றிச் சிறிது விளக்கிக் கூறினுர். சிலகட்டிடங்களையும் காட்டினுர். துணைவேந்தர் புன்முறுவலோடேயே எல்லாவற்றையும் உசாவித் தெரிந்துகொண்டார்.

மாலையில் '**போருக்குப் பின்னைய சீர்திருத்தம்**' என்னும் தலைப்பில் சிறந்த சொற் பெருக்கைத் துணைவேந்தர் அவர்கள் ஆங்கிலத்தில் ஆற்றினுர்கள்.

சங்க நூல்நிலையத்திற்குத் துணைவேந்தரவர்களை அழைத்துவந்து, சுவடிகளைக் காட்டிக் கல்லூரித்தலைவர் நூற்கள் சேமித்து வைத்திருப்பதையும் விளக்கினுர். துணைவேந்தர் ஆவலோடு சில புத்தகங்களை எடுத்துப் பார்த்து மனமகிழ்ச்சி கொண்டு பாராட்டினுர். நூல்நிலையத்தில் கல்லூரிமாணவர் ஆசிரியர் சார்பில் கல்லூரித்தலைவர் துணைவேந்தர்க்கு மாலைசூட்டினுர். மிக்க மகிழ்ச்சியோடு துணைவேந்தர் விடைபெற்றுக் கொண்டுசென்றுர்.

தமிழ்வளம் போற்றுக!

ஆசிரியர், அ. குழந்தைவேலன், கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

முற்றொடர்ச்சி (பக்கம்-192-மலர்-10)

அவற்றுள் மிகுதியானவை உண்மையை விளக்கவோ தமிழாக்கங் கருதியோ வெளிவந்தனவல்ல. தமிழின் தூய்மையையும் பழமையையும் உரிமையையும் குறைப்பதற்கென்று எழுந்தனவே மிகுதி. என்பாராய்ச்சி, புதைபொருளாராய்ச்சி, கல்வெட்டாராய்ச்சி, நூலாராய்ச்சி மிகுந்த இந்நாளிலுங்கூட, வரலாற்றினை வகுக்கத் துணைக்கொளவேண்டிய காண்டல், கருதல், உரையளவைகளில் கருதல் ஒன்றின் துணையேகொண்டு தங்கள் கருத்தை வலியுறுத்துவார் துணிபென்னே!

சோழர் வரலாற்றினை விரிவாக வரைந்துதவிய பேராசிரியர் K. A நீலகண்ட சாத்திரியார் அவர்கள் கரிகாலனின் வடநாட்டுப் போர்ச் செலவை மறைத்துள்ளது பெரிதும் வருந்தற்குரியதன்றோ! பட்டினப்பாலை சிலப்பதிகாரச் சான்றுகளை ஒதுக்கி உரையளவையைப்புறக் கணித்துள்ளது ஆக்கங்கருதியா? அழுக்காறு கொண்டா? சிக்கிம் நாட்டிற்கும் திபேத் நாட்டிற்கும் வரம்பாய் இடைநிற்கும் பெருந் தொடர் சோழத்தொடர் (Sola Range) என வழங்குவதும் அதனை அடுத்த மலைவழி (Sola pass) சோழர் கணவாய் என வழங்குவதும் சோழர் ஆட்சி இமயம்வரைப் பரவியிருந்ததென்பதற்குச் சான்றாகாதோ? சோல என்றசொல் அவண் வழங்கும் சிக்கிம திபேத் முதலிய எம்மொழிக்கும் உரியதன்றெனவும் சோழ என்றதின் சிதைவே எனவுங் கூறுகின்றனர். கரிகாலனின் வடநாட்டுப் போர்ச்செலவுண்மைக்கு இதனைக் காண்டலளவையாகக் கொள்ளின் இழுக்கென்னோ? தமிழ் வரலாறெழுதிய பேராசிரியர் P. T. சீனிவாசையங்கார் அவர்கள் சேரன்-செங்குட்டுவனின் சிறப்பினை விதந்து கூறப் புகுந்து சிலப்பதிகார வஞ்சிக்காண்டம் இளங்கோவடிகள் இயற்றியதன்றெனு அறுதியிட்டுள்ளது இன்னும் வியப்பே. முதலுக்கே மோசமென்றால் வட்டிக்கு வழியேது? தமிழாண்மையை விளக்கும் வஞ்சிக் காண்டத்தை இடைச்செருகல் என ஒதுக்கிவிட்டால் செங்குட்டுவனின் வடநாட்டு வென்றிச் செலவும் ஆரிய கனகவிசயரின் படுதோல்வியும் மறைந்து படுமன்றோ? தமிழருக்கு உயர்வுதரும் நூற்பகுதிகளைப் புறக்கணித்திடுவது அல்லது ஆரியத்தின் வழித்தெனக் காட்டுவது அவர்கள் இனஇயல்புபோலும்!

சிலப்பதிகாரத்தினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துதவிய பேராசிரியர் V. R. இராமச்சந்திர தீக்கதர் அவர்கள் தமிழ்க்கலையே ஆரியக்கலைமீது கட்டப் பட்டுள்ள தெனவும் கலைத்துறையில் தமிழ்

ஆரியத்திற்குப் பெரிதும் கடன்பட்டுள்ளதெனவும் துணிந்து கூறியுள்ளது என்னே! வடமொழி தென்மொழி நிலைகண்டுணர்ந்த சிவஞான முனிவர் உள்ளிட்ட அறிஞர் அனைவரும் ஒருமுகமாக எழுத்து சொல், ஒலி, யாப்பு முதலியதுறைகளில் தமிழிற்குமாரியத்திற்கும் முரண்பாடு மிகுதியென அறுதியிட்டுள்ளனர். பொருளியல், ஆரியம் உள்ளிட்ட எம்மொழிக்குமில்லை என்பது யாவருமறிந்த உண்மை. இசை, சிற்பம், வானாராய்ச்சி முதலிய துறைகளில் தமிழிற்காரியம் கடன்பட்டுள்ள தென்பதையும் வாழ்வியலில் ஆரியம் திருத்தம் பெற்றது நாவலந்தீவை நண்ணிப் பன்னூறாண்டு தமிழரொடு பழகிய பின்னரே என்பதையும் எவரே மறுக்கவல்லார்! ஒருத்தி பலரைமணப்பதும் மூத்தோள் இளையரை மணப்பதும் பிள்ளைப்பேற்றிற்காகக் கற்பை விட்டுக் கொடுப்பதும் வேள்வியின் பேரால் பொருந்தாச் செயல் புரிவதும் ஆரியர் கொண்டிருந்த சீரிய நாகரிகமன்றோ! கடவுள் பேரால் கட்டிய பொருந்தாப் புரட்டுரைகளை ஏற்றதொன்றே தமிழ் ஆரியத்திடம்பட்ட கடனாகும். ஆந்திரம், கன்னடம், மலையாளம் போன்று தமிழும் திரிபடைந்து வேற்றுமொழியாகாது விளங்குவது ஒன்றே தமிழ், காலைத்துறையில் ஆரியம் தழுவியதில்லை என்பதற்குச் சான்றாகாதோ!

இவையன்றி, கருத்து மாறுபாட்டால் வெளிவந்துள்ள உரைகள் மிகப்பல. சிந்துவெளிநாகரிகம் இன்னவருடையதெனவும் உலகநாகரிகத்திற்கு முதலாவார் யாவரெனவும் மக்கள் தோற்றம் எவண் நிகழ்ந்ததெனவும் மொழியமைதி எவ்வகைத்தெனவும் தெளிவாக ஸ்காட் எலியட், கால்டுவெல், ஜான்மார்ஷல், ஹீராஸ்போன்ற பேரறிஞர்கள் திட்டமாக அறுதியிட்ட பின்னரும் திராவிடர் ஆரியருக்குமுன் வந்தேறியவர் என்பார் கூற்று ஊற்றிற்கு நிற்குமா? விடாப்பிடியாய் அவ்வழுகிய கொள்கையை இன்றளவும் பற்றிக்கொண்டு கருத்தைப் பரப்புவார் நினைவுதான் யாதோ?

இவ்விளைவிற்கெல்லாம் முதலாவார் தமிழ்ப் பெருமக்களே எனத் தேற்றமாகக் கூறலாம். தமிழ், ஆங்கிலம், வடமொழி முதலிய பன்மொழிவல்லுநர் தமிழர்களிடையில்லையா! போதிய காலம், இடம், பொருள் குறைவா? இல்லை! இல்லை!! எல்லாம் உண்டு. ஆனால் எண்ணமில்லை; இன உணர்ச்சியில்லை; எழுச்சியில்லை. ஆதலின் "வஞ்சகர் வந்தவர் தமிழால் செழித்தார்-வாழ்வினிற் செழித்தபின் தமிழையே பழித்தார்". சிலபல செய்திகளைத் திரித்தும் மறைத்தும் வெளிப்படுத்தினராயினும் அவர்கட்கு நன்றி செலுத்தவேண்டியவர்களாகவேயுள்ளனம். அவர்கள் அதுதானும் செய்யாதிருப்பின் ஓரளவேனும் பயில்வார் உணர்வதற்கு வேறு வகையேது?

இப்படி, பலவாறாக வெளிவந்துள்ள யாவும் ஒன்றிற்கொன்று மாறுபட்டும் வேறுபட்டும் தொடர்பற்றும் நிறைவற்றும் சிதறித் தலைப்பொதும்பரிடை அரும்பிய பூந்துணர்களெனக் காணக் கிடக்கின்றன. அவற்றைத் திரட்டி நிரல் படத்தொகுத்தும் இடையீடுகளைக் கண்டு ஆய்ந்து நிறைத்தும், வரலாற்றுத் தடத்தினை வகுத்தலே இன்று நாம் நம் தாய்மொழிக்கும் தாயகத்திற்கும் செய்ய வேண்டிய தலையாய சிறப்பாகும். (தொடரும்)